# මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල
# மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
# MAHAPOLA HIGHER EDUCATION SCHOLARSHIP TRUST FUND

4 වන මහල, ජේ.ආර්.ජයවර්ධන මධ්‍යස්ථානය, 191, ධර්මපාල මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකා

4ஆவது மாடி,ஜேஆர்ஜயவர்தன நிலையம்,191,தர்மபால மாவத்தை,கொழும்பு 07

4TH Floor, J.R. Jayawardene centre, 191, Dharmapala Mawatha, Colombo 07, Sri Lanka


මගේ අංකය / எனது இல / My No. **MTF/1/1/I(2018/2019)**  ඔබේ අංකය / உமது இல. / Your No.  දිනය / திகதி / Date 2020

சங்கைக்குரிய தேரர் /திரு. /செல்வி.

**<u>மஹபொலஉயர் கல்விபுலமைப் பரிசில் வழங்கல் - 2018/2019</u>**

01. மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைப் பிரகாரம் சிறப்பு / சாதாரண புலமைப் பரிசிலை வழங்குவதற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

02.

(i) உங்களுடைய உயர் கல்வி நடவடிக்கைகளை பொருளாதார நெருக்கடிகளின்றி மற்றும் தடங்கல்களில்லாமல் தொடருவதற்கு வசதியளிப்பதற்கான உன்னத நோக்கத்திலேயே இப் புலமைப்பரிசில் உங்களுக்கு வழங்கப்படுகின்றது. அதற்கமைய, நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கற்கைநெறிக்குரிய கால எல்லைக்குள் சிறப்புப் புலமைப் பரிசிலுக்குரியவருக்கு மாதாந்தம் ரூபா 5,050/- என்ற வீதத்திலும் சாதாரண புலமைப் பரிசிலுக்கு மாதாந்தம் ரூபா 5,000/- என்ற வீதத்திலும் கல்வியாண்டொன்றில் அதிகபட்சமாக 10 மாதாந்த தவணைகள் நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைப் பிரகாரம் மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நேரடியாக உங்களுடைய வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படும். அவ்வாறு வைப்புச் செய்ப்பட்டதன் பின்னர் குறுஞ் செய்தி (எஸ் எம் எஸ்) ஊடாக உங்களுக்கு அறிவிக்கப்படும். (உங்களுடைய வங்கிக் கணக்கு பற்றிய விபரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இணைப்பு 02 இனைப் பூரணப்படுத்தல் வேண்டும்.)

(ii) தொழில் புரிதல் அல்லது தங்களின் சொந்த விருப்பம் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலமைப்பரிசில் கொடுப்பனவை நிறுத்துமாறு தங்களால் கோரிக்கை விடுக்க முடியும்.

03. இப் புலமைப்பரிசில் தொடர்பான நிபந்தனைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளை தயவுசெய்து கவனமாக வாசிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். புலமைப்பரிசிலை நீங்கள் ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்த நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

04. மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளினால் உங்களுடைய புலமைப்பரிசில் சம்பந்தமாக எதிர்காலத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

05. **உங்களுடைய பல்கலைக்கழகம், பீடம், பதிவிலக்கம் ஆகியவற்றில் எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றங்களை தாமதமின்றி எனக்கு அறிவித்தல் வேண்டும். பல்கலைக்கழகம் அல்லது கற்கை நெறி மாற்றங்களின்போது அதுபற்றி அறிவிக்கப்படாதவிடத்து மாற்றலாகி வந்த இடத்தில் புலமைப்பரிசில் தவணைப் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாது.** உங்களுடைய புலமைப்பரிசில் இலக்கத்தை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கடிதத் தொடர்புகளின்போது குறிப்பிடுதல் வேண்டும். உங்களது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அனைத்துக் கடிதத் தொடர்புகளும் உங்களுடைய பல்கலைக்கழகப் பதிவாளர் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06. மஹபொல புலமைப்பரிசில் வழங்கலுடன் தொடர்பான சம்பிரதாயத்திற்கமைய, அதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக **நீங்கள் தனிப்பட்ட வகையில் வருகைதந்து புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாதவிடத்து உங்களது புலமைப்பரிசில் இரத்துச் செய்யப்படும்.**

07. உங்களுடைய கல்வி சம்பந்தமான நடவடிக்கைகள் சகல வகையிலும் சிறப்பாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு - உண்மையுள்ள

**எம்.பராக்கிரம பண்டார**
பணிப்பாளர்
மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில்
நம்பிக்கை நிதியம்.

**மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் வழங்கலும் தவணைக் கொடுப்பனவுகள் தொடர்பான நிபந்தனைகள்**

மஹபொல புலமைப்பரிசிலுக்கான தகுதியைப் பெறுவதற்கு மற்றும் புலமைப்பரிசில் தவணைப் பணத்தை கற்கைநெறியை மேற்கொள்ளும் காலத்தினுள் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் தேவைகள் மற்றும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. புலமைப்பரிசில் வழங்கப்பட்ட கற்கைநெறிக்கான புலமைப் பரிசிலைப் பெறுபவர் கல்வி நடவடிக்கைகளில் அடையும் முன்னேற்றத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைக்கமைய மாதாந்த புலமைப்பரிசில் தவணைப் பணம் செலுத்தப்படும்.

1.1 பல்கலைக்கழகப் புலமைப் பரிசிலுக்காக கல்வி ஆண்டொன்றில் அதிகபட்சமாக 10 தவணைகள் மாத்திரம் என்ற ரீதியில் புலமைப் பரிசில் தவணைப் பணம் செலுத்தப்படும்.

1.2 பாடநெறிக்குரிய விரிவுரைகள், ஆய்வுக் கட்டுரை வகுப்புக்கள் மற்றும் செய்முறை வகுப்புக்கள் போன்ற பாடநெறி நடவடிக்கைகளில் முறையாகப் பங்கேற்க வேண்டுமென்பதுடன், புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து மாணவர்களும் முதலாவது கற்கைத் தவணையின் (1st Semester) இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் ஏற்புடைய பீடத்தின் பீடாதிபதியினால் உறுதிப்படுத்தப்பட்டு துணைவேந்தரால் அங்கீகரிக்கப்பட்டு மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்புதல் ஊடாக புலமைப்பரிசில் தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதுடன், அந்த சான்றுப்படுத்தலின் அடிப்படையில் எதிர்வரும் 06 மாதங்களுக்கான தவணைத் தொகைகள் தொடர்ச்சியாக செலுத்தப்படும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைக்கிணங்க புலமைப்பரிசில் செலுத்துவதனை இடைநிறுத்தப்படும். அந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துதலை மீண்டும் செயற்படுத்துவதற்காக ஆண்டின் இரண்டாவது கற்கைத் தவணைப் (2nd Semester) பரீட்சைக்கு மாணவர்கள் தகைமை பெற்றுள்ளதாக பல்கலைக்கழகத்தினால் மஹபொல நிதியத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

1.3 மாணவரொருவர் முதலாவது கற்கைத் தவணைப் (1st Semester) பரீட்சைக்கு தகைமையைப் பெற்றிராவிட்டாலும் பீடாதிபதியினால் இரண்டாவது கற்கைத் தவணைப் (2nd Semester) பரீட்சைக்கு தகைமை பெற்றுள்ளதாக பரிந்துரை செய்யப்பட்டதன் பின்னர் அந்த மாணவன் அல்லது மாணவியின் இடைநிறுத்தப்பட்ட புலமைப்பரிசில் தவணைத் தொகையை மீண்டும் செயற்படுத்துதல் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படும்.

1.4 புலமைப் பரிசில் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்காக புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களை பல்கலைக்கழகத்தினால் சிபாரிசு செய்யப்படுவதுடன் அவ்வாறு சிபாரிசுசெய்யப்படாவிடின் அது சம்பந்தமாக அறிந்துகொள்வதற்கு பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.

1.5 இந்தப் புலமைப்பரிசிலை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்தக் கற்கைநெறிக்கோ அல்லது வேறு கற்கைநெறியொன்றுக்கோ எந்தவிதமான புலமைப் பரிசில் அல்லது மாணவர் உதவு தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. வேறு புலமைப்பரிசிலுக்கு தகுதிபெறும் ஒரு மாணவனுக்கு / மாணவிக்கு அவர்களது விருப்பத்தின்பேரில் முதலில் பெற்றுக்கொண்ட புலமைப்பரிசிலை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அல்லது முதலாவது புலமைப்பரிசிலை இரத்துச்செய்துவிட்டு புதிய புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். **அவ்வாறான விடயங்களின்போது அது பற்றி மாணவர் உடனடியாக இந்த அலுவலகத்திற்கு அறியத்தரல் வேண்டும்.**

2. கீழ் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் **புலமைப்பரிசில் இரத்துச் செய்யப்படும்.** அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

i. கற்கை நெறியில் பங்குபற்றாமை.

ii. நீண்ட காலமாக கற்கை நெறியில் பங்குபற்றாமை.

iii. வருடாந்தப் பரீட்சைகளில் சித்தியடையாமை,

iv. கற்கைநெறியைக் கைவிடல்

v. ஒழுக்கத்தை மீறிய செயற்பாடுகள் காரணமாக விரிவுரைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருத்தல். (வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருத்தல்)

vi. பகிடி வதையில் ஈடுபட்டமையினால் தண்டனை வழங்கப்பட்டிருத்தல்.

vii. ஒழுக்கத்தை மீறிய செயற்பாடுகள் சம்பந்தமான குற்றங்களின்போது அல்லது வன்கொடுமை நிகழ்வுகளுடன் தொடர்புபட்டிருத்தல் காரணமாக பல்கலைக்கழகத்தினால் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை விதிக்கப்படல் அல்லது நீதிமன்றமொன்றினால் வேறு குற்றங்களிற்காக தண்டனை விதிக்கப்படல்.

viii. பல்கலைக்கழகச் சொத்துக்களுக்கு அல்லது அரசாங்கச் சொத்துக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் காரணமாக தண்டனை விதிக்கப்படல்.

ix. வருமானம் உழைப்பதற்காக வியாபாரமொன்றில், சேவையொன்றில் அல்லது தொழிலொன்றில் ஈடுபடல் போன்ற காரணங்களும் இந்தப் புலமைப் பரிசிலுக்கான உரிமையை இழப்பதற்கு காரணமாகலாம்.

3. மாணவரின் கட்டுப்பாட்டை மீறிய தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் மாணவன் / மாணவி தனது கற்கை நடவடிக்கைகளை பிற்போடுவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் உரிய எதிர்வரும் ஆண்டில் இந்த புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பார்களாயின் மற்றும் **அவ்வாறான பிற்போடுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டிருந்தபோதிலும்** தமது புலமைப்பரிசிலுக்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மாணவன் /மாணவி தமது முதலாவது புலமைப் பரிசில் வழங்கல் வைபவத்தின்போது தமது புலமைப்பரிசிலுக்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். அது பற்றி பல்கலைக்கழகத்தின் ஊடாக மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

4. மாணவரின் தற்போதைய பல்கலைக்கழக கற்கைநெறி பின்னர் மாற்றப்பட்டால் அவ்வாறான மாணவரொருவர் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கைக்கமைய புதிய பாடநெறியின் கீழும் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி வாய்ந்தவராகக் கருதப்பட்டால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது சிபாரிசின் அடிப்படையில் புதிய புலமைப்பரிசிலொன்று வழங்கப்படும். அந்தப் புலமைப் பரிசிலுக்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதாயின் பல்கலைக்கழகத்தினால் சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

5. புலமைப்பரிசில் அல்லது புலமைப்பரிசில் தவணைப் பணம் சம்பந்தமாக மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**பணிப்பாளர்**

MTF/1/1/I (2018/ 2019)

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில்
நம்பிக்கை நிதியம்